Koviloor Digital Library


3/2

உ

சிவமயம்

ஸ்ரீ திருவேங்கடமுடையான் துணை

தெய்வப் பாமாலை



லைனக் கவிஞர் சிது. சிதம்பரத்தின்
தொலை நோக்குப் பார்வையில் ...
பாரோர் படித்துப் பயனுற வழங்குவோர்
இல்லம் முத்துப்பட்டிணம், காரைக்குடி.

அபிசீனியா நா. பழநியப்பன்

திருமகள் அச்சகம்
"ஜெயசௌந்தர்"
ஜவஹர் தெரு, நியூ டவுன்
காரைக்குடி.

ACC.No. 32190
Q2 41733-2

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-2



ஸ்ரீ மஹா கணபதி ஸ்துதி

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே.
வக்ர துண்ட மஹாகாய ஸூர்ய கோடி ஸமப்ரபா
அவிக்னம் குருமே தேவா ஸர்வ கார்யே ஷு ஸர்வதா !

கஜாநநம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பல ஸார பக்ஷிதம்
உமா ஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேச் வர பாத பங்கஜம்

அகஜானன பத்மார்க்கம் கஜானன மஹர் நிசம்
அநேக தந்தம் பக்தானாம் ஏகதந்தம் உபாஸ் மஹே

மூஷிக வாஹந மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர
வாமந ரூப மஹேச்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே

கணபதி மாலா சரவண மந்திரம்

ஓம் ஐம் க்லீம் சௌ ; சக்திதராய :
ஓம் நங் மங் சிங் வங் யங் லம்போதராய
ஹ்றிம் ஹ்ரீம் ஸ்ரீம் சுப்ரமண்யாய
சரவணோத்பவாய ஹிரண்யோத் பவாய
க்லீம் சர்வ வச்யாய
தன ஆக்ருஷ்ய தம் பம் ஹம் ஜீம்
ஷம் ஹம் அதிர்ஷ்ட தேவதாய
ஷண்முகாய சர்வதோஷ நிவாரணாய
சர்வ க்ரஹ தோஷ நிவாரணாய
சிவாய சிவதனயாய இஷ்டார்த்தப் ராதாய காய
கம் கணபதியே க்லௌம் ஷம்
சரவண பவாய வசி வசி


KOVILOOR ... LIBRARY KOVILOOR
A. No. 32190

(பௌர்ணமி நாளில் இம்மந்திரத்தை 16 முறை ஜபித்தால் எல்லாப் பாக்யங்களையும் பெறுவது நிச்சயம்)

Koviloor Digital Library

பிள்ளையார் சிந்தனை

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜெய ஜெய
சீரய ஆனைக் கன்றே ஜெய ஜெய
அன்புடைய அமரர்கள் காப்பாய் ஜெய ஜெய
ஆவித் துணையே கணபதி ஜெய ஜெய
இண்டைச் சடைமுடி இறைவா ஜெய ஜெய
ஈசன் தந்தருள் மகனே ஜெய ஜெய
உன்னிய கருமம் முடிப்பாய் ஜெய ஜெய
எம் பெருமானே இறைவா ஜெய ஜெய
ஏழு லகுந்தொழ நின்றாய் ஜெய ஜெய
ஐயா கணபதி நம்பியே ஜெய ஜெய
ஒற்றை மருப்புடை வித்தகா ஜெய ஜெய
ஓங்கிய ஆனைக் கன்றே ஜெய ஜெய
ஒளவிய மில்லா அருளே ஜெய ஜெய
அக்கர வஸ்து ஆனவா ஜெய ஜெய
கணபதி என்வினை களைவாய் ஜெய ஜெய
ஙப்போல் மழுவொம் றேந்திய ஜெய ஜெய
சங்கரன் மகனே சதுரா ஜெய ஜெய
ஞய நம்பினார் பாலாடிய ஜெய ஜெய
இடம்படு விக்கின விநாயகா ஜெய ஜெய
தத்துவ மறைதரு வித்தகா ஜெய ஜெய
நன்னெறி விக்கின விநாயகா ஜெய ஜெய
பள்ளியிலுறைதரும் பிள்ளாய் ஜெய ஜெய
மன்றுளாடும் மணியே ஜெய ஜெய
இயங்கிய ஞானக் குன்றே ஜெய ஜெய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜெய ஜெய
இலவக் கொம்பொன் றேந்திய ஜெய ஜெய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜெய ஜெய
அழகிய ஆனைக் கன்றே ஜெய ஜெய
இனமத யானை முகத்தாய் ஜெய ஜெய
இரகுபதி விக்கின விநாயகா ஜெய ஜெய
ஆனந்தலோடாதி யிலடி தொழ வருளே ! ஜெய ஜெய

பிள்ளையார் சிந்தனை முற்றிற்று.

Koviloor Digital Library

பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை

எள்ளு பொரித்த பொரியும்
இடித்தவல்தன்னில் கலந்து
வள்ளிக் கிழங்கை திருத்தி
வாழைப் பழத்தை யுரித்து
உள்ளிய பாகு திரட்டி
உண்ணும் படியே தருவோம்
கள்ளத் திருமால் மருகா
கணபதி சப்பாணி கொட்டாயே
ஆறு தேங்காய் யவல் தூணி
அதற்குத் தகுந்த எள்ளுருண்டை
நூறு குடலை மாம்பழம்
நொடிக்குமளவி லமுது செய்ய
வல்ல பிள்ளாய்
ஆடாய் பாடாய் சங்கீதம்
அடியேன் காண நின்றாடாயே
சண்டை பெருச்சாளி ஏறிச்
சடுகுடு என்ன வுலாவி
இண்டை இளம்பிறை சாய
இணங்கிய கொம்பேரி ண்டுத
அண்டத்தமரர் துதிக்க
அடைக்கலங்காத்த பிரானாரே
குண்டைக் கணபதி நம்பி
குடங்கை யாற் சப்பாணி கொட்டாயே
பொழுது விடிந்தது பொழுது
போய்த்திருமலை மேல் ஏறவேண்டும்
ஏறி மர்ந்த பூக் கொய்யவேண்டும்
கொய்து திருமுடி சாத்த வேண்டும்
சாத்திக் கைகட்டி நிற்க வேண்டும்
நின்று திருவிளக் கேற்ற வேண்டும்
ஏற்றி அரகரா என்ன வேண்டும்
ஐயா கணபதி நம்பி
ஆயிர நாம முடையாய்

Koviloor Digital Library

பொய்யில்லா மெய்யுரைப்பாய்
போனதெல்லாந் தருவாய்
வெள்ளிக் தாலம்பூசி வைத்து
வேண்டும் படியே யிட்டுண்டு
பள்ளிக் கேற்ப நடவாய்
பாக்கியஞ் செய்த பிள்ளாய்
பிள்ளாய் பிள்ளாய் பேருடையாய்
பிரமனென்னும் பேருடையீர்
பிள்ளைகள் தங்கள் பிரானாரே
இருந்தீரே பிரானாரே
எங்கள் மனது கலங்காதே
பள்ளித்தடுக்குங் கையயேடும்
படிக்குஞ் சுவடியும் பரிந்தெடுத்துத்
துள்ளித் திரியும் கால் தன்னை
சுகமே நிறுத்தும் பிரானாரே
ஒட்டாதே ஒளியாதே
இட்டதே சோறும் பெற்றதே கரியும்
உண்டு தூங்கிப் பூஜை முடித்து
வெள்ளி முளைக்கப் பள்ளிக்கு வாரும்

(பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை முற்றிற்று)

சரஸ்வதி சிந்தனை

புத்தகத் துள்ளறை மாதே
பூவலமர்ந் துறை மாதே வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடையாளே
மூவுலகம் தொழுதேவி
செப்புக வித்தன முலையாய்
செவ்வரிய ஓடிய கண்ணாய்
முத்து நிறந்த வெண் பல்லாய்
முருக்கம்பூ மேனி நிறத்தாளே
தக்கோலந் தின்ற துவர் வாயாய்

Koviloor Digital Library
சரஸ்வதி யென்னுந் திருவே
எக்காலும் உன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்
ஆக்கா எம்பெருமாட்டி
அழகிய பூ அணை மீ தாய்
நோக்கா யெண் மிடி தீர
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயே
சாலி நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூஜை பண்ணிப்
பாலொடு பழத்தை நிரப்பிப்
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமஸ்து
ஞானக் கொழுந்தே நமஸ்து
கல்விக் கரசே நமஸ்து
கணக்கறி தேவி நமஸ்து
சொல்லு பொருளே நமஸ்து
சூட்சம ரூபி நமஸ்து !

சூர்ய நமஸ்கார துதி

ஆதியே உனைத் தொழுதேன்
ஐஸ்வரியம் பெருகத் தொழுதேன்
சந்திரா உனைத் தொழுதேன்
சந்தோஷம் பெருகத் தொழுதேன்
சூரியா உனைத் தொழுதேன்
சூழ்வினைகள் நீங்கத் தொழுதேன்
கதிரேசா உனைத் தொழுதேன்
கண்ணும் கருத்தும் விளங்கத் தொழுதேன்
மஹாதேவா உனைத் தொழுதேன்
மாங்கல்யம் பெருகத் தொழுதேன்
ஒத்ததிட்டேரி உலகம் வலம்வந்த
சித்தத்தை நோக்கியே
சிவசூரிய நாராயண மூர்த்தியே நம:

Koviloor Digital Library

அவனாசிப் பத்து

வற்றாத பொய்கை வளநாடு கண்டு
மலைமேலிருந்த குமரா !
உற்றா எனக்கு ஒருபேர மில்லை
உமையாற் தனக்குமகனே !
முத்தாடைதந்து அடியேனை யாளும்
முருகேசன் என்றனரசே!
வித்தார மாக மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

ஆலால முண்டோன் மகனாகி வந்து
அடியார் தமக்கம் உதவி
பாலூர(ல்) உண்ட கனிவாய் திறந்து
பயனஞ் செழுத்தை மறவேன்
மாலான வள்ளி தனைநாடி வந்து
வடிவோகி நின்ற குமரா !
மேலான வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

திருவாசல் தோறும் அருள்வே தமோத
சிவனஞ் செழுத்தை மறவேன்
முருகேசரென்று அறியார் தமக்கு
முதலாகி நின்றகுமரா !
குருநாத சுவாமி குறமாது நாதர்
குமரேச(ர்) என்ற பொருளே !
மறவாமல் வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

உதிரந் திரண்டு பனியீர லுண்டு
உருவாசல் தேடிவருமுன்
ததிபோ லெழுந்த திருமேனி நாதர்
கடைவீடு தந்து மருள்வாய்
முதிரஞ் சிறந்த பயல்வீறு செங்கை
வடிவேல் எடுத்தகுமரா !
யதிராய் நடந்து மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !
மண்ணாடு மீசன் மகனாரை யுந்தன்
மலைவீடு தந்து மருள்வாய்

Koviloor Digital Library

வண்டுரல் பாயும் வயலூரில் செங்கை
வடிவேல் எடுத்துகுமரா !
நன்றாக வந்து அடியேனை யாண்டு
கொண்டாடி வெற்றி மயில்மீ திலேறி
கொண்டாடி வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

நீலஞ் சிறந்த குறமாது வள்ளி
நின்பாகம் வைத்தகுமரா!
காலனெழுந்து வெகுபூசை செய்து
கயிறுமெடுத்து வருமுன்
வேலும் பிடித்து அடியார் தமக்கு
வீராதி வீரருடனே !
சாலப் பரிந்து மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

தலைகட்ட நூலின் நிழல்போல நின்று
தடுமாறி நொந்து அடியேன்
நிலைகெட்டு யானும் புவிமீதில் நின்று
நெடுமூச் செறிய விதியோ !
அலைதொட்ட செங்கை வடிவேற் கடம்பா
அடியேனை ஆளுமுருகா !
மலையேறி மேவுமயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

வண்டுண்டு பூவில் மதுவூரில் பாயும்
வயலூரில் செங்கை வடிவேல்
கண்டொன்று சொல்லித் திரிவார்கள் வாசல்
கடனென்று கேட்கவிதியோ ?
வண்டூறு பூவிலிதழ் மேவும் வள்ளி
தெய்வா னைக்குகந்த வேலா !
நன்றென்று சொல்லி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

விடதூத ரோடி வரும் போது உம்மை
வெகுவாக நம்பினேனே
குறமாது வள்ளியிடமாக வைத்து
மயிலேறி வந்தகுமரா !

Koviloor Digital Library

திடமாகச் சோலை மலைமீ தில்வாழும்
திருமால் தமக் குமருகா !
வடமா னபழநி வடிவேல் நாதா
வர வேணு மென்றனருகே !

ஓங்கார சக்தி உமைபால் குடித்து
உபதேச முரைத்தபரனே !
பூங்கா வனத்தில் இதழ் மேவும் வள்ளி
புஜமீ திருந்தகுகனே !
ஆங்கார சூரல் படைவீடு சோர
வடிவேல் விடுத்த பூபா
பாங்கான வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

ஆறாறு மாறு வயதான போது
அடியேன் நினைத்தபடியால்
வேறேது சிந்தை நினையாம லுந்தன்
ஆசாரசங்கமருள்வாய்
அசுரேசர் போல யமதூத ரென்னைத்
தொட்டோட கட்ட வருமுன்
மாறாது தோகை மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

கையார உன்னைத் தொழுதேத்த மனது
கபடேது சற்றுமறியேன்
அய்யா உனக்கு ஆளாகும் போது
அடியார் தமக்கும் எளியேன்
பொய்யான காயம் அறவே ஒடுங்க
உயிர்கொண்டு போகவருமுன்
வையாளி யாக மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

ஏதேது ஜென்ம மெடுத்தேனோ முந்தி
யிந்தப் பிறப்பிலறியேன்
மாதாபி தாநீ மாயன் தனக்கு
மருகா குறத்திக ணவா
காதோடு கண்ணை யிருளாக மூடி
உயிர்கொண்ட போகவருமுன்
வாதாடி நின்று மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே !

Koviloor Digital Library

சண்முகா வருக வருக

சரவணையி லேபிறந் தாறுமுக வடிவான
சண்முகா வருக வருக !
தர்க்கமிடு சூரனை திக்கவேல் விட்டதொரு
சுவாமியே வருக வருக !
அரவணையில் மால்மருக குமரகுரு பரனெங்கள்
ஆறுமுகா ஓடி வருக !
அலைகடலின மகரமீன் ஓடி விளையாடிய
அமரர்பதி வருக வருக !
கருவணையில் நற்சதுரமேல் நின்று நடனமிடும்
கணபதி துணைவன் வருக !
கடியை எண்ணாயிரம் சமணரை வதைத்திடும்
கந்தனே ஓடி வருக !
மருவணையில் பெண்ணாட உலகமது காக்கின்ற
வடிவேல் இலங்கு கரமும் !
வாலவய தாயுனது வாழ்மயில் ஏறிநட
மாடிவரு முருகேசனே !

சரபேசர்

காரைநகர் மீனாட்சி சுந்தரனார்
கோயிலிலே, கனகன காண,
நாரணனார் நல்தூணில் வந்தருளும்
நரசிங்கர் சினம் அடங்க
பேருருவப் பறவை யாய்க் கால்எட்டுப்
பெற்ற சிவ வடிவம் ஆன
பாருயர அருள்சரப இறைவனார்
திருவடிகள் பணிந்து வாழ்வோம்.

- தமிழ்கடல் இராய. சொக்கலிங்கம்


கொற்றவை

எடுத்த காரியம் யாவினும் வெற்றி,
எங்கு நோக்கினும் வெற்றி, மற் றாங்கே
விடுத்த வாய்மொழிக்கு எங்கணும் வெற்றி,
வேண்டி னேனுக்கு அருளினன் காளி;
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாரும் மானுடம் ஆயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பாள் அருட்பெருங் காளி,
பாரில் வெற்றி எனக்குறு மாறே !

- பாரதியார்

Koviloor Digital Library

திருமால் வணக்கம்



ஆதிசேஷா அனநதசயனா
ஸ்ரீநிவாச ஸ்ரீ வெங்கடேசா
வைகுண்ட நாதா வைதேகிப்ரியா
ஏழுமலை வாசா எங்களின் நேசா (ஆதி)

வேணுவிலோலன விஜயகோபாலா
நீலமேக வண்ணா கார்மேக கண்ணா (ஆதி)

காளிங்க நர்த்தன கமனீய கிருஷ்ணா
கோமள வாயன குருவாயூரப்பனா (ஆதி)

ஸ்ரீராம சந்திர மூர்த்தியைப் பாடு
தீவினை யகலவன் திருவடி தேடு (ஆதி)

பாவங்கள் போக்க பஜனைகள் செய்வோம்
பார்த்த சாரதியின் பாதம் பணிவோம் (ஆதி)

திருப்பதி மலையில் திருமுகம் காட்டும்
திருவேங்கடத்தான் திருவருள் பெறுவோம் (ஆதி)

ஸ்ரீரெங்கநாதன் பள்ளி கொண்டிருக்கும்
ஸ்ரீரெங்கம் சென்றவன் திருவடி பணிவோம். (ஆதி)

- ஸ்ரீ வெங்கடேசன்

திருமகள்

கமலம் மேவு திருவே ! நின்மேல்
காதலாகி நின்றேன் ;
குமரி ! நின்னே இங்கே - பெற்றோர்
கோடி இன்பம் உற்றார் ;
அமரர் போல வாழ்வேன், - என்மேல்
அன்பு கொள்வை யாயின் ;
இமைய வெற்றிபின் மோத - நின்மேல்
இசைகன் பாடி வாழ்வேன்.

- பாரதியார்

கலைமகள்

நாடிப் புலங்கள் உழுவார்
கரமும் நய உரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர்
நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர்
நெஞ்சும், உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே ! உன்
பாதம் அடைக்கலமே.

- தேசியவிநாயகனார்

Koviloor Digital Library

கொப்புடையம்மன்

இப்புவி தன்னைக் காக்க
எழிலருன் வடிவங் கொண்ட
கொப்புடை அம்ம னே ! – எம்
குறையெல்லாம் தீர்க்கும் தாயே !
உப்பில்லாப் பண்ட மன்றோ
உனதருள் இல்லா வாழ்வு ?
எப்பவும் எங்கள் நெஞ்சில்
இருந்திடல் வேண்டும் அம்மா !

– குழந்தை கவிஞர். அழ. வள்ளியப்பா

அபிராமி

தனம்தரும் ; கல்விதரும் ஒருநாளும் தளர்வு அறியா
மனம்தரும் ; தெய்வடிவும்தரும் ; நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும் ; நல்லன எல்லாம்தரும் ; அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் ; பூங்குழலாள், அபிராமி கடைக்கண்களே.

திரிபுரசுந்தரி

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையும்மென பாசாங்குசமும் கையில்
அணையுந் திரிபுரசுந்தரியாவது அறிந்தனமே.

வைரவர்

விரிந்தபல் கதிர்கொள் சூலம்,
வெடிபடு தமரு கம்கை,
தரித்ததோர் கோல கால
பைரவன் ஆகி, வேழம்
உரித்து, உமை அஞ்சக் கண்டு
ஒண்திரு மணிவாய் விள்ள,
சிரித்து அருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே.

நவக்கிரஹ வழிபாடு

வேயுறு தோளிபங்கன் ; விடம்உண்ட கண்டன்;
மிகநல்ல வீணை தடவி,
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல ; அவைநல்ல நல்ல ;
அடியார் அவர்க்கு மிகவே.

– திருஞானசம்பந்தர்.

Koviloor Digital Library

ஸ்ரீ சரபேஸ்வரர் அஷ்டகம்

பிரும்மதேவர் அருளியது

ஸர்வேச ஸர்வாதிக விச்வமூர்த்தே
கிருதாபராதான் அமரானுஏ தாசுன்யானு !
விநீய விச்வர்த்தி விதாயினேதே
நமோஸ்து துப்யம் சரபேச்வராய !! 1

தம்ஷ்டரா நகொக்ர : சரபஸ்ஸபக்ஷ ;
சதுர்ப்புஜச் சாஷ்டபத : ஸஹேதி : !
கோடீர கங்கேந்து தரோ நிருஸிம்ஹ :
க்ஷோபா பஹோஸ்மத் ரிபுஹாஸ்துசம்பு : !! 2

மிருகாங்கலாங்கூல ஸீசஞ் சுபக்ஷ
தம்ஷ்டராநநா ஷ்டாங்க்ரிபுஜா ஸஹஸ்ர : !
திரேணத்ர கங்கேந்து ரவிப்ரபாட்ய :
பாயாதபாயாத் சரபேச் வரோந : !! 3

க்ஷுப்தம் ஜகத்யேன நிருஸிம்மமூர்த்தே :
தேஜோபிராஸீத் கததாப மோஹ : !
அபூத் ப்ரஸன்ன : ஸபவேத்க்ஷனேந
பாயாதபாயாத் சரபேச் வரோந : !! 4

நிருஸம்ஹ மத்யித்தத திவ்யதேஜஸம்
ப்ரகாசிதம் தானவபங் கதக்ஷம்
ப்ரசாந்திமந்தம் விததாதி யோஸௌ
அஸ்மானபாயாத் சரபேச்வரோ வ்யாத் 5

யோபூத் ஸஹஸ்ராம்சு சதப்ரகாச :
ஸபக்ஷஸிம்ஹா கிருதி ரஷ்டபாத : !
ந்ருஸிம்ஹவிக்ஷோய சமம் விதாதா
பாயாதபாயாத் சரபேச் வரோந : !! 6

யோப்ரும்ஹணா வஜ்ரதரேண தேவை :
அன்யைரஸம் ப்ரேக்ஷ்ய மஹா மஹாத்மா !
க்ஷணாத் நிருஸிம்ஹா தபயம் ததௌஸ :
பாயாதபாயாத் சரபேச் வரோந : !! 7

துவாம் மன்யுமந்தம் ப்ரவதந்திதேவா :
துவாம் சாந்திமந்தம் முனயோ கிருணந்தி !
நீதோநிருஸிம்ஹ : ப்ரசமம் த்வயாவை
ஸர்வா பராதம் சரப ஷமஸ்வ : !! 8

Koviloor Digital Library

ஸ்ரீ சரபமூர்த்தியை பிரும்மா துதிக்கும் ஸ்தோத்ரம் இதைப்படிக்கிறவர்கள் மனக்கலக்கம், மூளைக்கோளாறு, பில்லி , சூன்யம், ஏவல் மருந்து முதலான துன்பங்களிலிருந்து விடுபட்டு அமைதியும், பேரின்பமும், பெருவாழ்வும் பெறுவார்கள்.

கருத்துரை

பிர்ம்மா நரசிம்மமூர்த்தியின் கடும்கோபத்தைப் பார்த்து உலகம் இனி என்ன ஆகுமோ என்று பயந்து ஸ்ரீபார்வதி மணாளனை வேண்டுகிறார். ஹேசம்போ ரெட்சிக்கவேணும் என்றவுடன் சரபமூர்த்தியாகி நரசிம்மத்தை சாந்தப்படுத்தி உலகத்தைக் காப்பாற்றினார். அந்தக் கருணாமூர்த்தியைத் துதிக்கின்றார்.

(1) சர்வேசா எல்லாம்வல்ல இறைவனே, எல்லா தேவர்களையும்விட முழுமுதற் கடவுளே, குற்றம் புரிந்த தேவர்களையும், அசுரர்களையும் திருத்தி இவ்வுலகத்திற்கு வளர்ச்சியையும், சந்தோஷத்தையும் கொடுக்கும் சரபேஸ்வரரே உங்களுக்கு வணக்கம் பல.

(2) தெத்துப்பற்களும், கூர்மையான நகங்களும், இருபுறத்திலும் இறக்கைகளும், நான்குகைகளும், எட்டுக்கால்களும், ஆயுதங்களை ஏந்தி, கங்கை மதியை தலையில் வைத்தும், நரசிம்மத்தை சாந்தப்படுத்தி ஆண்ட சரபேச்வரன் எனது வியாதி போன்ற எதிரிகளைப்போக்கி காக்க வேண்டும்.

(3) சிம்மத்தின் வால்போன்றவாலும், கருடன் போன்ற மூக்கும், யாளியைப் போன்ந தெத்துபல்பலும், எட்டுக்காலும், நான்கு கை, கங்கை, சந்திரனைத் தரிசித்து, ஆயிரம் சூரியனைப் போல் காட்சியளிக்கம் சரபேச்வரர் எனது பேராபத்தைப் போக்கி என்னையும், என் குடும்பத்தையும் காக்க வேண்டும்.

(4) ஒரு சமயம் நரசிம்மத்தினால் உலகம் அழியும் நிலை ஏற்பட்டது. அப்போது உடன்தோன்றி கண்இமைக்கும் சமயத்திற்குள் உலகத்தைக் காத்தருளிய சரபேச்வரர் எனக்கு இப்போது வந்திருக்கும் பேராபத்திலிருந்து என்னை காத்து இரட்சிக்க வேண்டும்.

(5) நரசிம்மமூர்த்தி அதிகமான கோபம் கொண்டார். அது இரண்யகசிபுவை மாத்திரம் கொல்ல வேண்டும் எனற் எண்ணத்துடன் வந்த கோபம். இரண்யனைக் கொன்றபிறகும் அனாவசியமாக இருந்த கோபத்தைப்போக்கி ஹரியைசாந்தமாக இருக்கச்செய்த சரபேச்வரர் எனக்கு என்றுமே பேராபத்துவராமல் காத்துக் கொண்டிருக்க வேண்டும்.

(6) ஸ்ரீ சரபேச்வரர் அவதாரம் ஆகும்போது ஆயிரம் சூரியன் ஒரேசமயம் உதயம் ஆனது போலும் இருந்தது. சூரியன் உதயமானால் இருள் அகலுவதுபோல் சரபேச்வரர் உதயம் ஆனதும், விஷ்ணுவின் ஆவேசமும், தன்னை அறியாத நிலையும் அகன்றது. உலகத்திற்கும் அபயமும் கிடைத்தது. இன்றும் சரபேச்வரர் நமக்கு பேராபத்து வராமல் உறுதுணையாக இருந்து காத்து வரட்டும்.

(7) எந்த மூர்த்தி, பிரம்மா, இந்திரன் முதலான தேவர்கள் வேண்டியதும் உடன்தோன்றி யாரையும் பாராமல் நரசிம்மத்தின் ஆவேசத்தைப்போக்கி உலகத்தைக் காத்ருளினாரோ அந்த சரபேச்வரர் என்னை காத்தருளட்டும்.

(8) பிரபோ, உங்களை கோபம் உடையவர் என்று சில தேவர்கள் பிதற்றினார்கள். வசிஷ்டர் போன்ற அறிவிற் சிறந்த முனிவர்கள் உன்னைப் போன்ற சாந்தி உடைய மூர்த்தி வேறுயாரும் இல்லை. என்பதைத் தவம் செய்து உணர்ந்தார்கள். ஏன் ? நரசிம்மத்தையே சாதுவாக சாந்தி அடையச்செய்த தெய்வமே உன் கருணையை விவரிக்க மனமும், வாக்கும் போதாது என் குற்றத்தைப் பொருத்து காத்தருள வேண்டும் சரப ! என்னை காத்தருள வேண்டும்.

Koviloor Digital Library

செல்வம் தரும் ஸ்ரீ குபேரன் வழிபாடு

எல்லா வசதிகளையும், செல்வங்களையும் பெற்று வாழும் ஒருவரைப் பார்த்து குபேர வாழ்க்கை வாழ்கிறார் என்று சொல்வது வழக்கம். இவற்றை எல்லாம் அளிக்கும் குபேரனை வழிபட்டு நீங்களும் குபேர வாழ்க்கை வாழ் குபேரனிடம் வேண்டுகிறோம். குபேரனும், மகாலட்சுமியும் தனதேவதைகள். மகாலட்சுமியின் முழுக்கருணையையும் இருவர் மட்டுமே பெற்றுள்ளனர். முதல்வர் **குபேரன்** அடுத்தவர் **தேவதச்சன்.**

செல்வம், பொன், பொருள், ஆரோக்கியம், கல்வி, வேலை வாய்ப்பு, வியாபாரம், தொழில் பெருக்கம் போன்ற எல்லா வகையான குபேர சம்பத்துக்களையும் பெற குபேரன் அருள் வேண்டும்.


நாடு, நகரங்கள், வேலைப்பாடுள்ள கட்டடங்கள், ஏரி, ஆறு, கடல் முதலியவற்றை நிர்மானிக்க தேவதச்சன் அருள்வேண்டும்.

இதனால் தான் குபேரனுக்கும், தேவதச்சனுக்கும் மகாலட்சுமி தன் அருட்கடாட்சத்தை முழுமையாக அளித்துள்ளான்.

குபேரன் என்பதற்கு செல்வத்தைப் பெருக்கக் கூடியவன் என்று பொருள். உப்பு + ஏரன் = குபேரன். உப்பு என்றால் பெருக்கக் கூடியவன். ஏரன் என்றால் செல்வன். எனவே தான் சம்பளம் வாங்கியதும் முதல் செலவாக உப்பு வாங்கும் பழக்கம் உள்ளது.

குபேரன் இராவணின் ஒன்று விட்ட சகோதரன். அதாவது குபேரனுக்குத் தந்தை ஒன்று, தாய் வேறு. குபேரன் மிகப் பெரிய சிவபக்தன். சிவபெருமானை நோக்கி குபேரன் கடும்தவம் புரிந்தார். இத்தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் குபேரனை வடதிசைக்கு அதிபதியாக நியமித்தார்.

எட்டுத் திக்குகளில் குபேரன் வடதிசைக்கு அதிபதி. மற்ற திக்குகளுக்கு யார் யார் அதிபதி என்ற விபரம்.



Koviloor Digital Library
இந்த எட்டுத் திக்குகளுக்கும் பாலக மந்திரம்

ஓம் ஈஸானனாய நமஹ
ஓம் இந்திராய நமஹ
ஓம் அக்னேய நமஹ
ஓம் யமாய நமஹ
ஓம் நிருருத்யை நமஹ
ஓம் வருயாண நமஹ
ஓம் வாயவே நமஹ
ஓம் குபேராய நமஹ

வடக்கு திசைக்கு குபேரன் அதிபதியாக இருந்தாலும் நாம் எப்போதும் வடக்குத் திசையில் தலைவைத்துப் படுக்கக் கூடாது. நம் உடலில் உள்ள ஹீமோகுளோபினில் இரும்புச் சத்து இருக்கிறது. அது வடதுருவத்தினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத் தான் தலையை வடக்கில் வைத்து படுக்கக் கூடாது என விஞ்ஞானம் சொல்கிறது.

குபேரன் விமானம் எங்கு பறந்த சென்றாலும் தங்கம், முத்து ஆகியவை சிதறிக் கொண்டே போகுமாம். அந்த விமானத்தை இராவணன் குபேரனிடமிருந்து பறித்துக் கொண்டு அதில்தான் சீதையைக் கடத்தி வந்ததாக இராமாயணம் கூறுகிறது.

குபேரன் யட்சர்களின் தலைவன். சாந்த குணம் கொண்டவர். எப்பொழுதும் சிவபூஜை செய்த கொண்டிருப்பவர்.

இவர் குபேர பட்டிணத்தில் (அழகாபுரியில்) உள்ளார். அங்கு அத்தாணி மண்டபத்தில் தாமரைமலர் மீது மீனாசனம் அமைத்து அதன்மேல் மெத்தை விரித்து அமர்ந்தள்ளார். ஒரு கை அபயமுத்திரை காட்டுகிறது. கிரீடம் முதலிய சொர்ண ஆபரணங்களுடன் திருமுத்துக் குடையின் கீழ் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்.

அவருடைய வலதுபுறத்தில் சங்கநிதி தேவதை, ஆண் உருவத்துடன் தன்னுடைய இடதுகையில் வலம்புரிச் சங்கும், வலது கை வரமுத்திரையுடனும் காட்சியளிக்கிறாள்.

இடது புறத்தில் பதுமநிதி தேவதை ஆண் உருவத்துடன் தன்னுடைய வலது கையில் பத்மத்துடனும் , இடது கை வரமுத்திரையுடனும் காட்சியளிக்கிறாள்.

குபேரனுடைய இடது புறத்தில் அவருடைய தர்மபத்தினி இடது கையில் கருநெய்தல் புஷ்பம் ஏந்திக் கொண்டு வலது கையால் தன்னுடைய கணவரை அணைத்தவாறு உள்ளார்.

இன்னொரு தோற்றம் இவருக்கு உண்டு. தாமரை மலரின்மீது மீனாசனத்தில் மெத்தைமீது வலது காலை மடக்கி வைத்துக் கொண்டு, இடது காலை தொங்கவிட்டுக் கொண்டு, இடது கையில் சங்கநிதி, பதுமநிதி அடங்கிய ஒரே கலசத்தை அணைத்துக் கொண்டு, வலது கையை வலது தொடையின்மீது வைத்துக் கொண்டு அழகான தோற்றத்துடனும் சிரித்த முகத்துடனும் காட்சியளிக்கிறார்.

Koviloor Digital Library

குபேரன் சிவந்த நிறம், குள்ள உருவம், நான்கு கோரைப்பற்களுடன் உள்ளவர் என்று புராண வரலாறு கூறுகிறது. ஆனால் வாயு புராணம் குபேரனுக்கு வெள்ளை நிறம் என்றும், பெரிய வயிறும், தெற்றப்பல்லும், விகார தோற்றம் கொண்டவர் என்று கூறுகிறது.

பார்வதி தேவி மீது மோகம் கொண்டதால் இந்த விகாரத் தோற்றம் அடைந்ததாகவும் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்ற தத்துவத்தையும் இது விளக்குகிறது.

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் ஆழ்வார் திருநகரியில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள தலம் திருக்கோளூர். வைணவ நவக்கிரக திருப்பதிகளில் இது எட்டாவது திருப்பதி.

ஒருமுறை சிவபெருமானைத் தரிசனம் செய்ய குபேரன் திருக்கைலாயம் சென்றார். அப்பொழுது சிவபெருமானும், பார்வதியும் அந்தப்புரத்தில் எழுந்தருளி இருந்தனர். அங்கு சென்ற குபேரன் பார்வதியை உற்று நோக்கினார். இதனால் பார்வதி தேவி குபேரனுக்கு சாபமிட்டார்.

அந்தச் சாபத்தின்படி குபேரன் உருவம் விகாரமடைந்தது. கண்களை இழந்தார். நவநிதிகளும் அவரைவிட்டு அகன்றன.

சாப விமோசனம் பெற அவர் தாமிபரணியில் நீராடி சிவபெருமானை நோக்கித் தவமிருந்தார். இத்தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவரைப் பார்வதி தேவியிடம் சென்று வழிபட கூறினார்.

குபேரனும் பார்வதி தேவியை வேண்ட செய்த குற்றத்திற்கு அதாவது கடைக்கண்ணால் தன்னைப் பார்த்தமைக்கு அவருக்கு ஒரு கண் தெரியாது என்றும் உடலும் விகாரமாகவே இருக்கும் என்றும் கூறி ஆனால் இழந்த நிதியைப் பெற திருக்கோளூர் சென்று வைத்தமாநிதி பெருமாளை வேண்டிக் கொள்ள கூறினார்.

உடனே குபேரனும் திருக்கோளூர் சென்று அங்குள்ள தீர்த்தத்தில் நீராடி பெருமாளை வணங்கி தன் வேண்டுகோளைக் கூறினார். பெருமாள் அவருக்குக் காட்சியளித்து நிதியில் ஒரு பகுதியை மட்டும் தருவதாகக் கூறி மரக்காலால் நிதியை அளந்து வழங்கினதாக புராணம் கூறுகிறது.

குபேரன் ஒரு சமயம் ஒரு முனிவரின் சாபத்தால் தன்னிடம் இருந்த பொன், பொருள் எல்லாம் இழந்து விட்டான். இதற்கு பரிகாரம் செய்து கொள்ள கும்பனோணத்தில் இருந்து காரைக்கால் செல்லும் சாலையில் கோனேரிராஜபுரத்திற்கு வடக்கில் உள்ள எஸ்.புதூர் என்ற இடத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ சனத்குமரேஸ்வரர் கோயில் சோம தீர்த்தத்தில் மாசி மாதம் புனித நீராடி சனத்குமரேஸ்வரரை வேண்டி வழிபட்டு இழந்த பொன், பொருளைப் பெற்றதாக இக்கோயில் புராண வரலாறு கூறுகிறது.

நாகப்பட்டினம் - கீழ்வேளூர் அருகில் உள்ள தேவூரில் கோயில் கொண்டுள்ள கதலிவனேஸ்வரர் ஆலயத்தில் குபேரன் இராவணனிடமிருந்த தனது சங்கநிதியை திரும்பப் பெற தவம் புரிந்திருக்கிறான்.

Koviloor Digital Library

குபேரனுடைய செல்வத்திற்கு சங்கநிதியும், பதுமநிதியும் காரணமானவர்கள். சங்கு என்பது கோடி கோடி மதிப்புள்ளது. இதற்கு சங்கநிதி என்று பெயர். பதுமம் என்பது சங்கத்தைவிட மிகமிக அதிகமானது. இது கோடி, கோடி, கோடி, கோடி தொகை ஆகும்.

திருநாவுக்கரசர் பாடல்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதவர்க்கே காந்தர் அல்லாராகில்

குபேரனைப் பற்றி திருமூலர் பாடல்

அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
யதுபதி யாதரித் தாக்கம் தாக்கென
இதுபதி கொள்ளென்ற எம்பெருமானே

திருப்பதி வெங்கடாஜலபதி - பத்மாவதி தாயார் திருமணத்திற்கு திருமாலுக்கு பொன்னும் பொருளும் தேவைப்பட்டது. பெருமாள் குபேரனை அழைத்து விபரம் கூறினார். குபேரன் என்னிடம் உள்ள எல்லாப் பொருளும் திருமாலுக்கு உரியது. அப்படி இருக்க என்னிடம் கேட்டுப் பெற வேண்டியதில்லை என்றார்.

திருமால் அதற்கு யுகதர்மத்தை தான் காக்க விரும்புவதாகவும், தனக்கு நூற்றுப் பதினாங்கு லட்சம் பொற்காசுகள் கடனாகத் தரும்படி கேட்டார். அதற்கு ஒவ்வொரு மாதமும் வட்டி மட்டும் கொடுத்து விடுவதாகவும், கலியுகத்தின் கடைசியில் அசலை திரும்ப குபேரனுக்குக் கொடுத்து விடுவதாகவும், அதற்குரிய கடன்பத்திரத்தையும் எழுதிக் கொடுத்தார். அந்தப் பத்திரத்தில் நான்முகனும், சிவபெருமானும் சாட்சிகளாகக் கையெழுத்திட்டுள்ளனர்.

திருக்கோயில் பூஜையின் முடிவில் குபேரனை வணங்கி கற்பூர ஆரத்தி காட்டும்போது யஜுர் வேதமான

ராஜாதி ராஜாய ப்ரஸஹ்ய ஸாஹிநே
நமோ வயம் வைஸ்ரவணாய குர்மஹே !
ஸமே காமாந் காமகாமாய மஹ்யம்
காமேஸ்வரோ கைஸ்ரவயோ ததாது !!
குபேராய வைஸ்ரவணாயள மஹாராஜாய நமஹ !!

என்பதைக் கூறித்தான் மங்களாரத்தி செய்கிறார்கள்.

தீபாவளித் திருநாள் அன்று லட்சுமி குபேர பூஜை செய்வது மிகவும் சிறப்பு. சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, கார்த்திகை மாதங்களில் பூரட்டாதி நட்சத்திரம் வரும் நாளில் அல்லது தேய்பிறை பிரதமை திதி வரும் நாளில் அல்லது வெள்ளிக் கிழமைகளில் குபேரனை வழிபடுவது மிகச் சிறப்பு.

Koviloor Digital Library

மேற்குறிப்பிட்ட மாதங்கள் ஒன்றில் பிரதமை திதி, பூரட்டாதி நட்சத்திரம் இணைந்து வரும் நாளில் வழிபடுவது மிகமிகச் சிறப்பாகும்.

வியாழக்கிழமையும் குபேரனை வழிபடுவது சிறப்பு. வியாழக்கிழமையில் பூச நட்சத்திரம் அமைந்தால் இன்னும் சிறப்பு. பூச நட்சத்திரத்திலும் குபேரனை வழிபடலாம்.

குபேர தியானம், மந்திரம், காயத்ரி ஆகியவற்றை தினமும் காலையில் கூறி வழிபட்டு வருவது மிகச் சிறப்பையும், எல்லா விதமான செல்வத்தையும் கொடுக்கும்.

குபேர தியானம்

மநுஜ வாஹ்ய விமாந வரஸ்திகம்
கருட ரத்ந நிபம் நிதி தாயகம் !
ஸிவஸகம் முகுடாதி விபூஷிதம்
வரகதம் தநதம் பஜ துந்திலம் !!

மானிட வர்க்கத்தால் தாங்கப்படுகின்ற சிறந்த ஒளி வீசிய விமானத்தில் அமர்ந்திருப்பவரும், மரகதம் போன்ற ஒளியையுடையவரும், நவநிதிகளின் தலைவரும், சிவபெருமானின் உற்ற கோமரும் சிறந்த சக்தி மிகுந்த கதையை கையில் ஏந்திக் கொண்டிருப்பவரும், பொன்முடி முதலிய ஆபரணங்களை அணிந்தவரும், தொந்தியுடையவரும், செல்வம் தருபவருமாகிய குபேரப் பெருமானைப் போற்றுவோமாக !

குபேரன் பிறந்த நட்சத்திரம்	:	பூசம்
குபேரனுக்குரிய திசை	:	வடக்கு
குபேரனுக்குரிய கிழமை	:	வியாழன்
குபேரனுக்குரிய நைவேத்தியம்	:	ஏலம், லவங்கம், கிராம்பு, வாசனை திரவியங்கள் கலந்த பால், கேசரி ஆகியவை

வியாழக்கிழமையிலோ அல்லது பூச நட்சத்திரத்திலோ அல்லது பூச நட்சத்திரம் வரும் வியாழக்கிழமையிலோ (இது மிகசிறப்பு) குபேரன் படத்தில் குபேரன் இயந்திரம் வைத்து பிரேம் செய்துள்ளதை குபேரனுக்குரிய வடக்குத் திசை நோக்கி வைத்து 48 நாட்கள் 108 முறை கீழ்க்கண்ட மந்திரத்தைக் கூறி குபேரனுக்குப் பிடித்த மேற்குறிப்பிட்ட நைவேத்தியங்களைப் படைத்து வழிபட குபேரன் அளவற்ற செல்வத்தைத் தருவான்.

குபேரன் மந்திரம்

ஓம் யக்ஷாய குபேராய வைஸ்ரவணாய
தன தான்யாதி பதயே தன தான்ய ஸம்ருத்திம்மே
தேஹி தாபய ஸ்வாஹா !

Koviloor Digital Library

குபேரர் காயத்ரி

ஓம் யக்ஷ ராஜாய வித்மஹே
அளகாதீசாய தீமஹி
தந்நோ குபேர ப்ரசோதயாத்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும், குத்துவிளக்கில் நெய்விட்டு ஐந்து முகங்களும் ஏற்றி குபேரனை பின்னால் கொடுக்கப்பட்டுள்ள 108 திருநாமங்களால் நிவேதனம் செய்து மேற்குறிப்பிட்ட இரண்டு மந்திரங்களையும் கூறி வழிபட்டாலும் குபேரனுடைய அருள் கிடைக்கும்.

ஸ்ரீ குபேர மந்திரம்


ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் குபேர லக்ஷ்ம்யை
கமல தாரிண்யை தனாகர்ஷிண்யை ஸ்வாஹா

தினமும் இந்த மந்திரத்தை 108 முறை சொல்லி வந்தால் செல்வம் பெருகும்.

செல்வம் தரும் குபேர யந்திரம்

18	30	24
30	24	18
24	18	30

ஸ்ரீ லட்சுமி குபேர யந்திரம்



கிரிவலப் பாதையில் தசமுக தரிசனம், சிவசக்தி ஐக்ய ஸ்வரூப தரிசனம் இவற்றிற்குப் பிறகு பஞ்சமுக லிங்கத்தின் அருகே உள்ள குபேர லிங்கத்தின் அருகில் குபேர தீர்த்தம் உள்ளது.

ஒவ்வொரு வருஷமும் குறிப்பிட்ட நாள், திதி, நட்சத்திரம், ஹோரையில் குபேரர் இந்தத் தீர்த்தத்துக்கு வந்து நீராடி, திரு அண்ணா மலையை தரிசனம் செய்து

Koviloor Digital Library

அங்கிருந்து திருப்பதி சென்று ஸ்ரீ நிவாசப் பெருமாளிடம் நிதி பெற்று குபேர லோகம் செல்கிறார். எனவேதான் திருப்பதி செல்லும் முன் திருஅண்ணாமலையாரை தரிசனம் செய்வது வழக்கம்.

தீபாவளி அன்று மாலை 6 மணிக்குமேல் குபேரனுக்குப் பூஜை செய்வதால் செல்வம் பெருகும். எல்லாவித நலமும் கிடைக்கும். குபேரனின் திருஉருவப் படத்திற்கு பூமாலை சாற்றி, படத்தருகே வீட்டில் உள்ள காசு பணம், வெள்ளிப் பாத்திரங்கள், தங்க நகைகள் எல்லாவற்றையும் வைத்து அலங்கரிக்க வேண்டும்.

12 அகல்விளக்கை ஏற்றி வைத்து பால்பாயாசம் செய்து நைவேத்தியம் செய்ய வேண்டும். பூ அட்சதையைக் கையில் எடுத்து கொண்டு 12 முறை இந்த ஸ்லோகத்தைச் சொல்ல வேண்டும்.

த்வாதஸ லிங்கஸ்துதி

சௌராஷ்ட்ரே
ஸோமனாதஞ்ச
ஸ்ரீ சைல்யே மல்லிகார்ஜுனம்
உஞ்சைன்ய மஹாகாளீம்
ஓங்கார மமலேஸ்வரம்

டாகின்யாம் பீமஸங்கரம்
ஸேது பந்தேது ராமேஸம்
நாகேஸம் தாறுகாவனே
வாராணஸ்யாம்ஸு
விஸ்வேஸம்
த்ரியம் பகம்கௌதமீதடே
ஹிமாலயேது கேதாராம்
குஸ்மேஸஞ்ச சிவாலயே
ஹேதானி ஜ்யோதி லிங்கோனி
ஸாயங்கால ஹபடேர்நித்தயம்
ஸப்தஜன்மக்ருதம் பாபம்
ஸ்மரணேன வினிஸ்யதி :

பிறகு குபேரனுக்கு உரிய மேற்குறிப்பிட்ட மந்திரம், காயத்ரி (மேலே கொடுக்கப்பட்டுள்ளவை) ஆகியவைகளைக் கூறி பின் குபேரனுக்கு உரிய பால்பாயாசத்தை நைவேத்தியம் செய்தபின் கற்பூர ஆரத்தி எடுத்து குங்குமத்தைக் கரைத்து அதையும் ஆரத்தி எடுத்து நிறைவு செய்ய வேண்டும்.

பூஜை முடிந்தபின் எல்லோரும் பூ அட்சதையை குபேரன் படத்தருகே சேர்க்க வேண்டும்.

Koviloor Digital Library

சர்வ மங்களாஷ்டகம்

(திருமண தோஷங்கள் நிவார்த்தியாகி, நன்முறையில் திருமணம் கைகூடவும், இல்லற வாழ்வில் உள்ள வேதனைகள் தணிந்து, சுப மங்கள சக்திகள் நிறைந்திடவும், தினமும் எட்டு முறை முறை ஓதி வழிபட்டு வரவும்)

லக்ஷ்மீர் யஸ்ய பரிக்ஹ: கமலபூ:
ஸூனுர்கத்மான் ரத:
பௌத்ரஸ சந்த்ர விபூஷண: ஸூரகுரு:
ஸேஷஸ்ச ஸய்யாஸன:
ப்ரம்மாண்டம் வரமந்திரம் ஸூரகணா
யஸ்ய ப்ரபோஸ் ஸேவகா:
ஸ த்ரைலோக்ய குடும்ப பாலனபர:
குர்யாத் ஸதா மங்களம்:

ப்ரம்மா வாயுகரீஸ ஸேஷ கருடா:
தேவந்த்ர காமௌ குரு:
சந்த்ரார்கௌ வருணானலௌ
மனுயமௌ வித்தேஸ விக்னேஸ்வரௌ
நாஸத்யௌ நிர்ருதிர்ம ருத்கணயுதா:
பர்ஜன்ய மித்ராத்ய:
ஸஸத்ரீகாஸ் ஸூரபுங்கவா: ப்ரதி தினம்
குர்வந்து வோ மங்களம்

விஸ்வாமித்ர பராஸரெஸர்வ ப்ருகவோ
கஸ்த்ய: புலஸ்த்ய: க்ரது:
ஶ்ரீமானத்ரி மரீசி கௌத்ஸ புலஹா:
ஸக்திர் வஸிஷ்டோங்கிரா:
மாண்டவ்யோ ஜமதக்நி கௌதம பர -
த்வாஜாத யஸ்தாபஸா:
ஶ்ரீமத்விஷ்னு பதாப்ஜ பக்தி நிரதா:
குர்வந்து வோ மங்களம்

மாந்தாதா நஹுஷோம்பரீஷ ஸகரௌ
ராஜா ப்ருதுர்ஹைஹய:
ஶ்ரீமான் தர்மஸூதோ நளொ தஸரததோ
ராமோ யயாதிர்யதது:
இக்ஷ்வாகுஸ்ச விபீஷணஸ்ச பரதஸ்
சோத்தான பாதத்ருவா
வித்யாத்வா புவி பூபிஜ:ப்ரதிதினம்
குர்வந்து வோ மங்களம்

ஶ்ரீமேருர் ஹிமவாம்ஸ்ச மந்தரகிரி:
கைலாஸ ஸைலஸ்ததா

Koviloor Digital Library

மாஹேந்த்ரோ மலயஸ் விந்த்ய நிஷதௌ
ஸிம்ஹஸ்ததா ரைவத:
ஸஹ்யாத்ரிர்வர கந்தமாதனகிரிர்
மைநாக கோமந்தகா -
வித்யாத்வா புவி பூப்ருத: ப்ரதிதினம்
குர்வந்து வோ மங்களம்

கங்கா ஸிந்து ஸரஸ்வதீ ச யமுனா
கோதாவரீ நர்மதா
க்ருஷ்ணா பீமரதீ ச பல்குஸரயூ:
ஸ்ரீகண்டகீ தோமதீ
காவேரீக பிலாப்ரயாகவிநதா
வேத்ராவதீ த்யாதயோ
நத்ய:ஸ்ரீஹரிபாத பங்கஜபவா:
குர்வந்து வோ மங்களம்

வேதாஸ்சோப நிஷத் கணாஸச விவிதா:
ஸாங்கா புராணான் விதா:
வேதாந்தா அபி மந்த்ர தந்தரஸஹிதா -
ஸதர்கஸம் ருதீநாம் கணா:
காவ்யாலங்க்ருதி நீதிநாடக கணா
ஸப்தாஸச நானாவிதா:
ஸ்ரீ விஷ்ணோர் குணராஸி கீர்த்தனகரா:
குர்வந்து வோ மங்களம்

ஆதித்யாதி நவக்ரஹா: சுபகரா
மேஷாதயோ ராஸயோ
நக்ஷத்ராணி ஸயோக காஸ்ச திததய:
தத்தேவதா: தத்கணா:
மாஸாப்தா ருதவஸத தைவ திவஸா:
ஸந்த்யாஸ்த தைவ திவஸா:
ஸர்வே ஸ்தாவர ஜங்கமா: பரதி தினம்
குர்வந்து வோ மங்களம்

இத்யே தத்வர மங்களாஷ்டகமிதம்
ஸ்ரீவாதிராஜேஸவரைர்
வ்யாக்யாதம் ஜகதாமபீஷ்ட பலதம்
ஸர்வாஸுபத் வம்ஸநம்
மாங்கல்யாதி ஸுபக்ரியாஸு ஸததம்
ஸந்த்யாஸுவாய: படேத்
ர்மார்ததாதி ஸமஸ்தவாஞ்சித பலம்
ப்ராப்னேத்யஸௌ மாநவ:

மங்களம் சுபமங்களம்

Koviloor Digital Library

ஸ்ரீ பைரவாஷ்டோத்ரம்

தியானம்

ரக்த ஜ்வால ஜடாதரம் ஸுவிமலம் ரக்தாங்க தேஜோமயம்
த்ருத்வா சூல கபால பாச டமரூந் லோகஸ்ய ரக்ஷாகரம்.
நிர்வாணம் சுந வாஹநம் த்ரிநயனம் ஆனந்த கோலாஹலம்
வந்தே ஸர்வ பிசாசநாத வடுகம் க்ஷேத்ரஸ்ய பாலம் சிவம்..

சிவந்த நெருப்புச் சுடரொளி பரவும் ஜடாமுடியும் தூய்மைமிக்க உடலும் பொன்னொளி போன்ற பொலிவும் சூலம் - கபாலம் - உடுக்கை முதலானவற்றைக் கைகளில் தரித்து உலகையெல்லாம் காத்தருள்பவரும் திகம்ப்ரத் தோற்றத்துடன் முக்கண்ணனாகவும் ஆனந்த வடிவினனாகவும் பூதப்ரேத நாதனாக நாயை வாகனமாய்க் கொண்டு ஆலயக்காவலராக விளங்கும் பைரவரை வணங்குகிறேன்.

1. பைரவோ பூத நாதஸ்ச - பூதாத்மா பூதபாவந :
க்ஷேத்ரத க்ஷேத்ரபாலஸ்ச க்ஷேத்ரக்ஞ : க்ஷத்ரியோ விராட் :

2. ஸ்மஸான வாஸீ மாம்ஸாஸீ ஸர்ப்ப்ராஸீ ஸ்மராந்தக்ருத்
ரக்தப : பாநப : ஸித்த : ஸித்தித : ஸித்த ஸேவித : ..

3. கங்கால : காலசமந காலகாஷ்டா தநு : கவி :
த்ரிநேத்ரோ பகுநேத்ரஸ்ச ததா பிங்கல லோசந : ..

4. சூலபாணி : கட்கபாணி : கங்காளீ தூமரலோசந :
அபீருர் பைரவோ நாதோ பூதபோ யோகிநீ பதி : ...

5. தந்நோ தநஹாரீச : தநவாந் ப்ரீதி பாவந :
நாகஹரோ நாகபாசோ வ்யோமகேச : கபாலப்ருத் ...

6. கால : கபால மாலீச கமநீய : கலாநிதி :
த்ரிலோசநோஜ்வலந் நேத்ர த்ரிசிகீ ச த்ரிலோகப ..

7. த்ரிநேத்ர தநயோ டிம்ப : சாந்த : சாந்தஜனப்ரிய
வடுகோ வடுவேஷஸ் ச கட்வாங்க வர தாரக ..

8. பூதாத்யக்ஷ : பசுபதி - பிக்ஷுக : பரிசாரக :
தூர்தோ திகம்பர : சூரோ : ஹரிண : பாண்டுலோசந : ..

9. ப்ரசாந்த : சாந்தித : ஸித்த சங்கர : ப்ரிய பாந்தவ :
அஷ்டமூர்த்திர் நிதீசஸ்ச ஞான ச க்ஷுஸ் தபோமய : ..

10 அஷ்டாதார : ஷடாதார : ஸர்யுக்த : சிகீஸக :
பூதரோ பூதராதீச : பூபதிர் பூதராத்மஜ :

Koviloor Digital Library

11. கங்காலதரீ முண்டீச நாகயக்ஞோபவீத வாந்
ஜ்ரும் பணோ மோஹந : ஸ்தம்பீ மாரண : ஷோபணஸ்ததா ..

12. சுத்த நீலாஞ்ன ப்ரக்ய : தைத்யஹா முண்டபூஷித
பலிபுக்பலி புக்நாநோ : பாலோ பால பராக்ரம ..

13. ஸர்வாபத்தாரணோ துர்கோ துஷ்ட பூத நிஷேவித
காமீகலாநிதி : காந்த : காமிநீ வசக்ருத்வசீ

14. ஸர்வஸித்திப்ரதோ வைத்யோ ப்ரபுர் விஷ்ணுரிதீவஹி
அஷ்டோத்தரசதம் நாம் நாம் பைரவஸ்ய மஹாத்மந : ..

பலச்ருதி (பாராயண பலன்)

1. பாபங்கள் அகலும்

மிருகங்களால் ஏற்படும் பயம் அரசபயம் நவக்கிரகங்களால் ஏற்படும் தோஷங்கள் ஆகியன நீங்கும்.

கள்வர் பயம் - நெருப்பினால் ஏற்படும் பயம் போன்ற கோரமான அசம்பாவிதங்களால் ஏற்படம் இடையூறுகளும் தீய கனவுகளால் ஏற்படும் தொல்லைகளும் பைரவருடைய நாம ஸங்கீர்த்தனத்தால் நிவர்த்தியாகும்.

இதை ஆயிரக்கணக்கான முறை மீண்டும் மீண்டும் படித்து மனனம் செய்ய வேண்டும். யாரொருவர் சோம்பல் இல்லாமல் சிரத்தையுடன் மனம் லயித்து ஒரு நாளின் 3 வேளைகளிலும் என ஓராண்டு காலத்துக்கு இதைப் படிக்கிறார்களோ அவர் வாழ்வில் எல்லாம் சித்திகளையும் பெரும் செல்வ செல்வாக்குகளையும் அடைவார்கள்.

இரவில் இதை 3 முறை ஜபித்தால் எதிரிகள் மறைவார்கள். எதிர்ப்புகள் இல்லாதொழியும்.

8 மாத காலம் பாராயணம் செய்தால் அரசாங்கத்தின் மூலம் பெரும் நன்மைகளை அடையலாம்.

நல்ல குடும்பம் நல்ல பிள்ளைகள் செல்வ வசதிகளை விரும்புவோர் இதை நள்ளிரவில் 3 மாத காலம் பாராயணம் செய்தால் விரும்பியவற்றை அடைவார்கள்.

வியாதிகளால் துன்பப்படுவோர் இதைப் பாராயணம் செய்தால் பைரவ மூர்த்தியின் அருளால் வியாதியின் பிடியிலிருந்து விடுபடுவார்கள்.

பொதுவாக எதை எதை விரும்பிப் படித்துப் பாராயணனம் செய்கிறார்களோ அவற்றை நிச்சயமாய்ப் பெறுவார் என்பது திண்ணம்.

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செல்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியாரெல்லாம்.


- கந்தபுராணம்

KOVILOOR ... LIBRARY ... KOVILOOR
A. No........... 32190

Koviloor Digital Library

Koviloor Digital Library

நல்லதே நினைப்போம் ... நல்லதே செய்வோம் ...
நல்லதே நடக்கும்.



என்றும் உங்களுடன்

திருமகள் அச்சகம், காரைக்குடி

ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ், காரைக்குடி

ஸ்ரீ திருமகள் ஆப்செட் பிரிண்டர்ஸ், காரைக்குடி

ஸ்ரீ மஹாலக்மி பிரிண்டர்ஸ், மதுரை